# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1795/35 - 2013 ජනවාරි මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.01.31

*1795/35 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 24/51*

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 19 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்கு விதிகள்.*

குமார வெல்கம,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
2013.01.30.

**ஒழுங்கு விதிகள்**

(1) 1983, யூன் 3 ஆந் திகதிய 248 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1983 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன (வாகனங்களின் நிர்மாண) பற்றிய ஒழுங்குவிதிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(அ) அதன் ஒழுங்குவிதி 57 இனை 58 ஆக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(ஆ) அதன் ஒழுங்கு விதி 56 இனை உடனடுத்துப் பின்னர் பின்வரும் ஒழுங்குவிதியைச் சேர்ப்பதன் மூலமும் -

"57. கீழே நிரைப்படுத்தப்பட்ட வாகனங்களின் உடலமைப்பானது பின்வருமாறு நிறந்தீட்டப்படுதல் வேண்டும் :-

(1) கட்டணம் அல்லது வெகுமதிக்காக பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு பயன்படுத்தப்படும் பொது பயணி போக்கு வரத்து வாகனங்களானவை -

(அ) பன்றன் (PANTONE) நிறக்குறியீட்டு இல. 2707 C என்பதனைப் பயன்படுத்தி இளநீல நிறத்தில் நிறந்தீட்டப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) உடலமைப்பின் வலதுபக்கத்திலும் இடதுபக்க பின்புற முனையின் மீதும் 60X35 மி.மீ. எழுத்தளவில் சொந்தக்காரரின் பெயர் மற்றும் முகவரி என்பன காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அது உடலமைப்பின் பின்பக்க இறுதியிலிருந்து 1000 மி. மீ. இல் முடியுமாறும் உடலமைப்பின் அடிப்பாக முனைக்கு மேலாக 500 மி. மீ. இலும் காட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் இயக்கப்படுவதும் பேணப்படுவதுமான வசுவண்டிகள் பன்றன் (PANTONE) நிறக்குறியீட்டு இல. 185C என்பதனைப் பயன்படுத்தி சிவப்பு நிறத்தில் நிறந்தீட்டப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(3) கட்டணத்துக்காக அல்லது வெகுமதிக்காகப் பாடசாலைப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் பன்றன் நிறக்குறியீட்டு இல. 1375 C என்பதனைப் பயன்படுத்தி மஞ்சள் நிறத்தில் நிறந்தீட்டப்படுதல் வேண்டும்."

2. இவ்வொழுங்கு விதிகள் பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கு 2013, பெப்புருவரி 1 ஆந் திகதியிலிருந்தும், பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கு 2014, சனவரி 1 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2-460

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.